RW-6006

411101

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## இக்கால இலக்கியம்

(CBCS—2010 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி - அ** (10 × 2 = 20)

பின் வரும் வினாக்களுக்கு **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. செந்தமிழ் நாடு என்றவுடன் பாரதியின் காதில் தேன் வந்து பாய்வது ஏன் ?

2. ஏடெடுத்த பாவேந்தரை எழுதச் சொல்லியவை யாவை ?

3. 'ஏழு கடல் தாண்டி' எனும் கவிதையில் கூறும் கடற்கரைக் காட்சியினை எழுதுக.

4. 'அண்ணாவின் ஓர் இரவு' நாடகத் தொடக்கத்திலுள்ள இரு மாளிகைக் காட்சிகளின் வழி கூறப்படும் செய்திகள் யாவை ?

5. ‘மூன்றாம் பிறை’ பெயர் பொருத்தம் பற்றி எழுதுக.

6. ‘விடி வெள்ளி’ நாவல் எந்த வட்டாரத்தைச் சார்ந்தது ?

7. ‘கூள மாதாரி’ நாவலின் தலை மாந்தர் பெயரைக் குறிப்பிடுக.

8. ‘கந்தகக் கிடங்கினிலே’ எனும் சிறுகதையில் கூறப்படும் செய்தி என்ன ?

9. ‘மானுடப் பிரவாகம்’ எனும் சிறுகதையில் இறப்புச் சடங்குச் செய்திகள் எவ்வாறு கூறப்படுகிறது ?

10. ‘இது இறகுகளின் நேரம்’ எழுதப்பட்டதன் நோக்கம் என்ன ?

## பகுதி - ஆ $(5 \times 5 = 25)$

பின் வரும் வினாக்களுக்கு **இரண்டு பக்க** அளவில் விடை எழுதுக.

11. (அ) பாரதி தமிழுக்கு நாம் ஆற்றவேண்டிய பணிகளாக குறிப்பிடுவனவற்றை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) ‘தமிழ்க்கனவு’ எனும் கவிதையில் பாவேந்தர் கூறுவன யாவை ?

12. (அ) மனிதம் மறந்த மனிதக்குடைகளின் காலம் இது எனக் குறிப்பிடுவதை ஆராய்க.

(*அல்லது*)

(ஆ) புவியரசு நாடகக் கூறுகளை எவ்வாறு மூன்றாம் பிறையில் கையாண்டுள்ளார் ?

13. (அ) ‘ஓர் இரவு’ நாடகத்தில் சமூகத்தின் மூடப் பழக்கங்களை எவ்வாறு அண்ணா சாடுகிறார் ?

(*அல்லது*)

(ஆ) விடி வெள்ளி நாவலின் முடிவு நம்ப முடியாததாக இருக்கிறது என்று நாவலாசிரியர் அய்க்கன் முன்னுரையில் கூறுவதை ஆராய்க.

14. (அ) கூளமாதாரியில் கூளயன் பாத்திரப் படைப்பை ஆராய்க.

(*அல்லது*)

(ஆ) ‘தீயில் எதுவும் வேகும்’ எனும் சிறுகதையில் சமூக நீதிக்கு போராடும் பொன்னுத்தாயின் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.

15 (அ) ‘அசோக வனம்’ கட்டுரையில் அதர்மம் தொலைந்து, தர்மம் தலையெடுக்கக் கூறப்படும் செய்திகள் யாவை ?

(*அல்லது*)

(ஆ) அப்துல் ரகுமானின் சமூக விழிப்புணர்வுகளை குறிப்பிடுக.

**பகுதி - இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **ஐந்து** பக்க அளவில் கட்டுரை எழுதுக.

16. பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ் உணர்வை அவர் கவிதைகளின் வழி ஆராய்க.

17. அண்ணாவின் நாடக மொழி நடையினை விளக்குக.

18. மனித உரிமைகளை விளக்கிட கதைகளை எவ்வாறு பேராசிரியர் இராஜ முத்திருளாண்டி ஆயுதங்களாக பயன்படுத்தியுள்ளார்.

19. கூள மாதாரியில் ஆடு மேய்க்கும் சிறுவர்களின் வாழ்க்கை எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது ?

20. ஆண்டாள் பிரியதர்ஷினியின் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்க.

———— *** ————

**RW-6007** **411102**

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## அற இலக்கியங்கள்

(CBCS—2010 onwards)

Duration : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி - அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** சுருக்கமான விடை தருக.

1. அரசனுக்குரிய ஆறு அங்கங்கள் எவை ?

2. ஞாலம் கருதுவோர் எதைக் கருதி இருப்பர்.

3. திருவினை ஆக்குவது எது ?

4. நாலடியார்—விளக்கம் தருக.

5. நாலடியாரின் யாப்பு யாது ?

6. தீதில் ஒழுக்கம் எத்தகையது ?

7. பொய்யா விளக்கம் எது செய்யும் ?

8. ‘இன்னாது இருவர் உடன் ஆடல் நாய்’—எதற்குக் கூறப்பட்டது ?

9. ‘கற்றாரை நோக்கிக் கருத்தழிக’— கருத்துரைக்க.

10. ‘மீட்டுவோன் இன்றிக் கீதம் விளையுமோ’—எதற்குக் கூறப்பட்டது ?

## **பகுதி - ஆ** $(5 \times 5 = 25)$

பின் வரும் வினாக்களுக்கு **இரண்டு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) அறத்தின் சிறப்புக்களாக வள்ளுவர் உரைப்பன யாவை ?

*(அல்லது)*

(ஆ) கொடுங்கோன்மையாளன் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?

12. (அ) அறிவுடைமை பற்றிய நாலடியார் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

*(அல்லது)*

(ஆ) நாலடியார் கூறும் குடிப்பிறப்பின் சிறப்புக் கூறுக.

13. (அ) 'பொருள் கொடுத்துக் கொள்ளார் இருள்' இதனால் உணர்த்தப் படும் செய்தியை எடுத்துரைக்க.

(*அல்லது*)

(ஆ) வ. சுப. மாணிக்கனாரின் அறச்சிந்தனையை உணர்த்துக.

14. (அ) ஞானாசிரியரின் பெருமைகளை வேதநாயகர் உரைப்பது எவ்வாறு ?.

(*அல்லது*)

(ஆ) தெய்வம் குறித்து வேதநாயகர் கூறுவனவற்றை விளக்குக.

15. (அ) ‘கெழுவது காட்டும் குறி’யாகக் குமரகுருபரர் கூறுவன யாவை ?

(*அல்லது*)

(ஆ) மேன்மக்கள் பற்றி நீதி நெறி விளக்கம் கூறுவன யாவை ?

**பகுதி - இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் **ஐந்து பக்க** அளவில் விடை தருக.

16. அன்புடைமை பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.

17. நான் மணிக்கடிகை கூறும் அறநெறிகளை உணர்த்துக.

18. கல்வியின் சிறப்புப் பற்றிக் குமர குருபரர் கூறுவன யாவை ?

19. 'குடிகளினியல்பு' பற்றி நீதி நூல் கூறுவன யாவை ?

20. திருவள்ளுவர் அறம் கூறும் முறைமைகளை எடுத்துக்காட்டுக.

***

**RW-6008** **411103**

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## இலக்கணம் தொல்—எழுத்ததிகாரம்

(CBCS—2010 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி - அ** (10 × 2 = 20)

பின் வரும் வினாக்களுக்கு **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. சார்ந்து வரல் மரபின் மூன்று—எவை ?

2. மொழி முதலாகும் உயிர்கள் எவை ?

3. நெட்டெழுத்துக்குரிய சாரியை எது ?

4. நீ என்னும் பெயர் எவ்வாறு உருபேற்கும் ?

5. ‘உரைப்பொருட்கிளவி நீட்டமும் வரையார்’— எங்ஙனம் ?

6. ‘நாடுரி’—புணர்ச்சி விதி கூறுக.

7. ‘வகார மிசையும் மகாரம் குறுகும்’— தெளிவுபடுத்துக.

8. தான் யான் எனும் பெயர் உருபியல் நிலையும்— எவ்வாறு ?

9. இருதிசைகள் எவ்வாறு புணரும் ?

10. ‘நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்’—எடுத்துக்காட்டி விளக்குக.

## பகுதி - ஆ $(5 \times 5 = 25)$

பின் வரும் வினாக்களுக்கு 250 சொற்கள் **அல்லது இரண்டு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) எழுத்துக்களுக்குரிய மாத்திரைகளை விளக்குக.

*(அல்லது)*

(ஆ) மூவகை மொழிகள் குறித்து விளக்குக.

12. (அ) எழுத்து, சொல் வகையால் புணர்ச்சி நான்காகும் தன்மையைப் புலப்படுத்துக.

*(அல்லது)*

(ஆ) தொகைமரபு கூறும் பொதுப்புணர்ச்சியை விளக்குக.

13. (அ) ஐகார ஈற்றுச் சொற்கள் புணரும் முறையினை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) தொல்காப்பியர் கூறும் மரப்பெயர்களைக் கூறி அவற்றின் புணர்ச்சியை விளக்குக.

14. (அ) ணகார ஈற்றுப் புணர்ச்சியை விளக்கிக் கூறுக.

(*அல்லது*)

(ஆ) லகார ஈற்றுச் சொற்கள் புணருமாற்றைத் தெளிவுபடுத்துக.

15. (அ) 'தொள்ளாயிரம்'—புணர்ச்சி விதி கூறுக.

(*அல்லது*)

(ஆ) தொல்காப்பியரின் குற்றியலுகரக் கோட்பாட்டைப் புலப்படுத்துக.

**பகுதி - இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் **ஐந்து பக்க** அளவில் விடை தருக.

16. மெய்ம்மயக்கம் பற்றி ஒரு கட்டுரை வரைக.

17. அளவு, நிறை, எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியைத் தொகுத்துரைக்க.

18. இகர ஈற்றுப் புணர்ச்சி விதிகளைத் தொகுத்து எழுதுக.

19. ழகர ஈற்றுப் புணர்ச்சிகள் பற்றிய விதிகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

20. எண்ணும்பெயர்கள் புணரும்போது பெறும் மாற்றங்களைப் புலப்படுத்துக.

———— *** ————

**RW-6009** **411501**

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## Elective—தமிழகக் கோயிற்கலைகள்

(CBCS—2010 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி - அ** (10 × 2 = 20)

பின் வருவனவற்றிற்கு **ஓரிருவரிகளில்** விடை தருக.

1. திருப்பரங்குன்றத்து எழுத்து நிலை மண்டபத்தில் காணலாகும் உருவங்கள் யாவை ?

2. சிலப்பதிகாரம் கூறும் கோட்டங்கள் இரண்டினைத் தருக.

3. பல்லவரது குடைவரைகளின் பாணிகளைக் குறிப்பிடுக.

4. மகேந்திரவர்மன் எத்தனை குடைவரைக் கோயில்களை உருவாக்கியுள்ளான் ?

5. கோயிலைக் கட்டுவதற்கான நிலத்தை எத்தனை வகையாகப் பகுத்துள்ளனர் ? அவை யாவை ?

6. துவார சோபை என்றால் என்ன ?

7. இறையுரு செய்யப் பயன்படும் மரங்கள் இரண்டினைத் தருக.

8. திருமாலின் கிடந்த கோல நிலைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

9. சிறுதெய்வ வழிபாட்டு வகைகள் இரண்டினைத் தருக.

10. வழிபாட்டின் இரு வகைகளைக் குறிப்பிடுக.

## பகுதி - ஆ $(5 \times 5 = 25)$

பின் வருவனவற்றிற்கு 250 சொற்கள் அல்லது **இரண்டு பக்க** அளவில் விடையளிக்க.

11\. (அ) சங்ககாலக் கோயில்களின் நிலையைப் புலப்படுத்துக.

(*அல்லது*)

(ஆ) மணிமேகலை கூறும் கோயில் பற்றிய செய்திகளைத் தருக.

12\. (அ) பல்லவர் குடைவரையின் பொது அமைப்பினை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) விஜய நகர நாயக்கர் காலக் கோயில் கோபுரங்களின் சிறப்புக்களைப் புலப்படுத்துக.

13. (அ) தேவ கோட்டத்தின் அமைப்பினை ஆராய்க.

(*அல்லது*)

(ஆ) கோயில்களில் மண்டபங்கள் பெறும் சிறப்பினை எடுத்துரைக்க.

14. (அ) ஆண்டாள் சிற்பம் அமைந்துள்ள முறையினை ஆராய்க.

(*அல்லது*)

(ஆ) முருகனின் திருஉருவ அமைதியினைப் புலப்படுத்துக.

15. (அ) நைவேத்திய மரபுகளை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) இலக்கியங்கள் காட்டும் சிறுதெய்வ வழிபாட்டு முறையினை எடுத்துரைக்க.

**பகுதி - இ** (3 × 10 = 30)

பின்வருவனவற்றிற்கு எவையேனும் **மூன்றனுக்கு ஐந்து பக்க** அளவில் விடையளிக்க.

16. சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாகும் கோயில்களின் சிறப்பினை எடுத்துரைக்க.

17. சோழர் காலக் கோயில்களின் அமைப்பினை ஆராய்க.

18. கோயில் விமான அமைப்பினை ஆராய்க.

19. ஊரகத் தெய்வங்களின் திருவுருவ அமைதி மற்றும் கோயில் அமைப்பினை எடுத்துரைக்க.

20. திருவிழாக்களின் சிறப்பினை ஆராய்க.

——— *** ———

RW-6010

411701

# M.A. DEGREE EXAMINATION
# NOVEMBER 2010

## தமிழ்

## I/D : தமிழக வரலாறும் பண்பாடும்

(CBCS—2010 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி-அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

1. திராவிடர்கள் யார் விளக்கம் தருக ?

2. புதிய கற்காலம் பெயர்க் காரணம் தருக ?

3. சிந்துவெளி ஆராய்ச்சி என்றால் என்ன ?

4. பல்லவர்கள் யார் ?

5. சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்குமான உறவுகள் குறித்து எழுதுக ?

6. பிற்காலச் சோழர்கள் பற்றி எழுதுக.

7. பாண்டிய நாடு பற்றி மார்கோபோலோ தரும் குறிப்புகள் யாவை ?

8. பிரம்ம தேயம் பற்றி எழுதுக ?

9. வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் என்றால் என்ன ?

10. ஆங்கிலேயர் ஆட்சியை பூலித்தேவன் எதிர்த்த விதம் குறித்து எழுதுக.

**பகுதி - ஆ** $(5 \times 5 = 25)$

**கீழ்க்காணும் வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடை எழுதுக.**

11. (அ) தமிழகம் பற்றி அறிய உதவும் வெளிநாட்டார் குறிப்புக்கள் எவை ? விளக்குக ?

*(அல்லது)*

(ஆ) பழைய கற்காலம் குறித்து விவரி.

12. (அ) சங்ககாலச் சேரர்கள் பற்றி விவரிக்க ?

*(அல்லது)*

(ஆ) தமிழகத்தின் 'இருண்டகாலம்' எது ? விளக்குக.

13. (அ) ராஷ்டிர கூடர்கள் யார் ? விளக்குக.

(*அல்லது*)

(ஆ) பிற்காலச் சோழரின் கடல் கடந்த தொடர்புகள் குறித்து எழுதுக.

14. (அ) முதல் பாண்டியப் பேரரசு குறித்து எழுதுக ?

(*அல்லது*)

(ஆ) பாளையப்பட்டு ஆட்சி முறை என்றால் என்ன ?

15. (அ) வேலூர்க்கலகம் இந்திய விடுதலைக்கு வித்திட்ட பாங்கினை எழுதுக.

(*அல்லது*)

(ஆ) ஆங்கிலேயர் வருகையால் தமிழகப் பண்பாட்டில் நிகழ்ந்த மாற்றங்கள் என்ன ?

**பகுதி - இ** $(3 \times 10 = 30)$

கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் **மூன்றனுக்கு ஐந்து பக்க** அளவில் கட்டுரை எழுதுக.

16. சிந்து வெளி நாகரீகத்தை "திராவிட நாகரீகம்" என்பார் கூற்று சரியா ? விவாதிக்க.

17. சங்ககாலம் தமிழகத்தின் பொற்காலம் என்பதை நிறுவுக.

18. முதலாம் இராஜராஜனின் வெற்றிச் சிறப்பை விவரிக்க ?

19. தமிழகத்தில் மராட்டியர் ஆட்சி நடைபெற்ற விதம் குறித்து எழுதுக.

20. இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு எத்தகையது விளக்குக.

——— *** ———

**RW-6011** **411301**

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## காப்பிய இலக்கியங்கள்

(CBCS—2008 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி-அ** (10 × 2 = 20)

பின் வரும் வினாக்களுக்கு **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. 'காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக'— சிலப்பதிகார மங்கலவாழ்த்துப் பாடல் உணர்த்தும் செய்தி யாது ?

2. 'சிலம்புள கொண்ம' —விளக்குக.

3. 'இதுவோ அன்னாய் காமத்தியற்கை'—விளக்கம் தருக.

4. சுரமஞ்சரி செய்த சபதத்தினைச் சீவகசிந்தாமணி வழி விளக்குக.

5. மேன்மழ நாட்டின் வளம் பற்றிய அடைமொழிகள் யாவை ?

6. ஆனாய நாயனார் குறித்துச் சேக்கிழார் அறிமுகப் படுத்துவன யாவை ?

7. ‘இருந்த மாநிலம் செ ல்ல ரித்திட வும் ஆண்டு எ ழாதாள்’-விளக்குக.

8. புருவமும், தோளும், நாட்டமும் இனியன துடித்தன —யார் கூற்று ? விளக்குக

9. மரியாள் அலங்காரத்தை வெறுத்துக் கூறியது யாது ?

10. கதீஜாவின் சிறப்புப் பண்பிற்குச் சான்று ஒன்று தருக.

## பகுதி-ஆ $(5 \times 5 = 25)$

பின் வரும் வினாக்களுக்கு **ஒரு பக்க அளவில்** விடை தருக.

11. (அ) கண்ணகி கண்ட கன வினைக் கனாத்திற முரைத்த காதை வழி விளக்குக.

(*அல்லது*)

(ஆ) மாதவி ஆடிய பதினொருவகை ஆடல்களை விளக்குக.

12. (அ) மணிமேகலை பளிக்கறை புகுந்த சூழலை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) சீவகன் குணமாலையை மதம் கொண்ட யானையிடமிருந்து மீட்டமையை விளக்குக.

13. (அ) மேன் மழ நாட்டுக் கார்கால வருணனையைப் பெரிய புராணம் காட்டுவது எவ்வாறு ?

(*அல்லது*)

(ஆ) இறைவன் ஆனாய நாயனார் குழலோசையைக் கேட்க வந்தமையை விளக்குக.

14.(அ) திரிசடை கண்ட கனவினை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) சீதையைக் கண்ட அனுமன் தனக்குள் கூறியவற்றை எழுதுக.

15. (அ) சூசையின் பண்புகளை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) கதீஜா அம்மையார் கண்ட கனவு பற்றி எழுதுக.

**பகுதி-இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** ஐந்து பக்க அளவில் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிலப்பதிகாரத்தில் கதைத்திருப்பம் ஏற்படுத்துவதை விவரிக்கவும்.

17. மணி மேகலை சுதமதியுடன் மலர்வனம் புகுந்தமையை விளக்குக.

18. ஆனாய நாயனாரின் குழலோசையைக் கேட்டு உயிரினங்கள் மயங்கியமையைச் சேக்கிழார் எவ்வாறு விளக்குகிறார் ?

19. சீதையின் துயர நிலையைக் காட்டும் கம்பரின் கவித்திறத்தினைப் புலப்படுத்துக.

20. மரியாளின் பண்பு நலன்களைத் தொகுத்தெழுதுக.

———— *** ————

**RW-6012** **411302**

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## தொல் : பொருள் (முன்னைந்து இயல்கள்)

(CBCS—2008 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி - அ** (10 × 2 = 20)

பின் வரும் வினாக்களுக்கு **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. ஒழுக்க வகைகள் ஏழினை எழுதுக.

2. தொல்காப்பியர் ‘மடலேறுதல்’ பற்றிக் கூறுவனவற்றை எழுதுக.

3. “வஞ்சி தானே முல்லையது புறனே”—விளக்குக.

4. “அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்”—விளக்கம் தருக.

5. “தாயெனப் படுவாள் செவிலியாகும்”—விளக்கம் தருக.

6. களஞ்சுட்டுக் கிளவி யார்க்குரியது ? விளக்குக.

7. ‘கற்பு மணம்’—விளக்கம் தருக.

8. ‘கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள’—யாருக்குரிய கூற்று ?

9. ‘இறைச்சி தானே பொருள் புறத்ததுவே’—விளக்கம் தருக.

10. ‘பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே’—விளக்கம் தருக.

## **பகுதி - ஆ** (5 × 5 = 25)

பின் வரும் வினாக்களுக்கு **இரண்டு பக்க** அளவில் விடை எழுதுக.

11\. (அ) தோழியின் கூற்றினை அகத்திணையியல் வழி நின்று விளக்குக.

(*அல்லது*)

(ஆ) தலைவன் பிரிதலுக்குரிய காரணங்களை விளக்குக.

12\. (அ) பாடாண் திணையில் இடம்பெறும் பொருள்களைத் தொகுத்து விளக்குக.

(*அல்லது*)

(ஆ) காஞ்சித் திணையின் இலக்கணத்தை விளக்குக.

13. (அ) களவில் செவிலிக்குரிய கூற்றுக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைமகனின் இயல்புகளாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை தொகுத்துரைக்க.

14. (அ) காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) கூத்தருக்கும். பாணருக்குமுரிய கூற்றுக்கள் யாவை ? விளக்குக.

15. (அ) உள்ளுறை எத்தனை வகைப்படும் ? அவற்றை விளக்குக.

(*அல்லது*)

(ஆ) மரபு வழுவமைதியாகப் பொருளியல் காட்டுவன யாவை ?

**பகுதி - இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **ஐந்து பக்க** அளவில் விடை தருக.

16. முதல், கரு, உரிப் பொருள்களின் சிறப்பினை மதிப்பிடுக.

17. வெட்சித்திணையின் இலக்கணம் கூறி அதன் துறைகளை விவரிக்க.

18. களவியலில் தோழிக்குரிய கூற்றுக்கள் நிகழும் இடங்களை விவரிக்க.

19. கற்பிடத்து அமையும் வாயில்களும், அவற்றிற்குக் கூறப்பட்ட மரபுகள் பற்றியும் விவரிக்க.

20. அறத்தொடு நிற்றல் குறித்துக் கட்டுரை வரைக.

——————— *** ———————

RW-6013 | 411303

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## இலக்கியத் திறனாய்வும் கொள்கையும்

(CBCS—2008 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி-அ** (10 × 2 = 20)

பின் வரும் வினாக்களுக்கு **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. திறனாய்வின் பயன் என்ன ?

2. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு—வரையறை செய்க.

3. கற்பனையும் படிமமும் ஒன்றாகுமா ?

4. ஒலிநயம் என்றால் என்ன ?

5. அணுகுமுறை, ஆராய்ச்சி முறை—வேறுபடுத்துக.

6. அறவியல் அணுகுமுறை—சிறு விளக்கம் தருக.

7. முக்கியமான நான்கு பெண்ணியக் கவிஞர்களைச் சுட்டுக.

8. புனைவியல் எழுத்தாளர்கள் இருவரைக் கூறுக.

9. ஒப்பிலக்கியம் என்றால் என்ன ?

10. தமிழ்த் தேசிய இலக்கியங்கள் இரண்டு குறிப்பிடுக.

**பகுதி-ஆ** $(5 \times 5 = 25)$

பின் வரும் வினாக்களுக்கு **ஒரு பக்க அளவில்** விடை தருக.

11. (அ) திறனாய்வாளரின் பண்புகளை எடுத்துரைக்க.

(*அல்லது*)

(ஆ) ஒப்பீட்டு முறைத் திறனாய்வைச் சான்று தந்து விளக்குக.

12. (அ) உணர்ச்சி குறித்து மேனாட்டாரின் சிந்தனைகளைக் கூறுக.

(*அல்லது*)

(ஆ) உணர்ச்சிக்கேற்றபடி வடிவமாற்றம் நிகழ்வதைப் புலப்படுத்துக.

13. (அ) தமிழ்ப் புதினங்களின் ஆய்வில் சமூகவியல் அணுகுமுறை பயன்படுவதைத் தெளிவு படுத்துக.

(*அல்லது*)

(ஆ) விளக்கவியல் அணுகுமுறையின் பயன் பாட்டைக் குறிப்பிடுக.

14.(அ) தமிழகப் புதுக்கவிதையில் நடப்பியல் இயக்கத் தின் செல்வாக்கை எடுத்துக் காட்டுக.

(*அல்லது*)

(ஆ) தமிழில் தலித்தியச் சிறுகதைகளின் போக்குகளைச் சுட்டுக.

15. (அ) இலக்கியக் கொள்கை, திறனாய்வு, வரலாறு ஆகியவற்றின் உறவுநிலைகளை வெளிப்படுத்துக.

(*அல்லது*)

(ஆ) பல்வேறு இலக்கியக் கொள்கைகளை எடுத்துரைக்க.

**பகுதி-இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்த் திறனாய்வின் வளர்ச்சியை எடுத்துரைக்க.

17. கற்பனையின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

18. உளவியல் அணுகுமுறையில் தமிழ்ப் புதினங்களை ஆராய்க.

19. செவ்வியல் இலக்கிய இயல்புகளைச் சங்கக் கவிதைகளுக்குப் பொருத்திக் காட்டுக.

20. இலக்கியக் கொள்கை உருவாக்கத்தையும் அதன் பயனையும் விவரிக்க.

———— *** ————

**RW-6014** **411503**

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## Elective—சிற்றிலக்கியங்கள்

(CBCS—2008 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி - அ** (10 × 2 = 20)

பின்வரும் வினாக்கட்கு **ஓரிரு வரிகளில்** விடைதருக.

1. பரணி—என்பதன் இலக்கணம் யாது ?

2. ‘கடை திறப்பு’—என குறிப்பிடப்படுவது ஏன் ?

3. குலோத்துங்க சோழனுலாவில் இடம்பெறும் கண்ணிகள் எத்தனை ?

4. பசுவிற்காக நீதி செய்த அரசன் பற்றிக் குறிப்பிடுக.

5. தூதுப் பொருண்மை பற்றி எழுதக.

6. தமிழரசின் மெய்க் காப்பாளர்களாக விளங்குபவர்கள் யாவர் ?

7. நந்திக்கலம்பகம் எந்தச்சூழலில் யாரால் யார் மீது பாடப் பெற்றது ?

8. நந்திக்கலம்பகத்தில் இடம் பெறும் உறுப்புக்கள் யாவை ?

9. புள்ளிருக்கு வேளூர் தலத்தின் பிற பெயர்கள் யாவை ? அவற்றின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.

10. ‘சங்கத்தமிழின் தலைமைப் புதல்வா’ எனக் குமரகுருபரர் குறிப்பிடுவது ஏன் ?

## பகுதி-ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்கட்கும் **ஒரு பக்க** அளவில் விடைதருக.

11. (அ) கலிங்கப் போர் நிகழ்வதற்கான காரணங்களை காளிக்கு, பேய் எவ்வாறு விளக்கியது ?

*(அல்லது)*

(ஆ) கடைதிறப்பு பகுதியிலுள்ள ஏதேனும் ஒரு பாடலிலுள்ள அகச்சுவையினை விளக்கி எழுதுக.

12. (அ) குலோத்துங்கனது முன்னோர்கள் பெருமையை விவரிக்க.

*(அல்லது)*

(ஆ) குலோத்துங்கனைக் கண்ட பேதைப் பெண்ணின் மாற்றங்களை எடுத்துரைக்க.

13. (அ) தமிழை அரசனாக எங்ஙனம் ஆசிரியர் உருவகம் செய்துள்ளார் ?

(*அல்லது*)

(ஆ) சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களாக தமிழ் விடுதூதில் இடம் பெறுவனவற்றை எழுதுக.

14. (அ) நந்திவர்மபல்லவனின் வீரத்தினை சான்றுடன் தருக.

(*அல்லது*)

(ஆ) 'காலம்'—'எனும் உறுப்பு வழி நந்திக்கலம்பகத்தில் இடம் பெறும் செய்திகள் யாவை ?

15\. (அ) குமரகுருபரர் முருகனது திருமேனியை எங்ஙனம் வருணித்துள்ளார் ?

(*அல்லது*)

(ஆ) முருகன் சிறுதேர் உருட்டி விளையாடிய காட்சியினை விளக்குக.

**பகுதி-இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்கட்கு **ஐந்து பக்க** அளவில் கட்டுரை வடிவில் விடைதருக.

16\. கலிங்கத்துப் பரணியில் இடம் பெறும் ஒன்பான் சுவைகளை விளக்கி எழுதுக.

17\. உலா வாயிலாக ஒட்டக்கூத்தர் உணர்த்தும் குலோத்துங்கனின் பெருமைகளை எடுத்துரைக்க.

18. தமிழின் பெருமைகளை தமிழ்விடுதூது வழி விளக்குக.

19. நந்திக் கலம்பகத்தில் இடம் பெறும் யான மறம், குதிரை மறம், காலாட்படை மறம், அகச்சுவைக் கூறுகள் ஆகியவற்றை எழுதுக.

20. முருகன் அடியார்க்கருளிய திறத்தினையும், அவதாரச் சிறப்பினையும் விளக்கிக் கூறுக.

———— *** ————

**RW-6015** **411703**

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010

## Tamil

## I/D : இதழியல் (JOURNALISM)

(CBCS—2008 onwards)

[Common for M.A Tamil/MSW]

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி-அ** (10 × 2 = 20)

**எல்லா** வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடையளிக்க.

1. இதழியல் சொற்பொருள் விளக்கம் வரையரை.

2. அச்சுவழி, மின்வழி பணிகள் இரண்டினைக் கூறுக.

3. இதழ்களின் வகைகள் இரண்டினைக் கூறுக.

4. மருத்துவ செய்தி, விளையாட்டு செய்தி குறித்து வரைக.

5. தகவல் தொடர்பில் அச்சுவழி பெறும் இடங்கள் யாது ?

6. பத்திரிகைச் சட்டங்கள் என்றால் என்ன ?

7. திரைப்பட தணிக்கைக் குழு என்றால் என்ன ?

8. பருவ இதழ்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

9. இந்திய உலகச் செய்தி நிறுவனம் என்பது யாது ?

10. பத்திரிகை மன்றம் என்பது யாது ?

**பகுதி - ஆ** $(5 \times 5 = 25)$

**பின்வரும்** வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை எழுதுக.

11. (அ) மரபு வழி ஊடகங்களைக் கால அடிப்படையில் எவ்வாறு பகுக்கலாம் ?

*(அல்லது)*

(ஆ) அச்சுவழி ஊடகங்களைக் கால அடிப்படையில் எவ்வாறு பகுக்கலாம் ?

12. (அ) நிறுவன இதழ்கள் குறித்து சிறிய கட்டுரை வரைக.

*(அல்லது)*

(ஆ) செய்திகள்-கல்வி வேலை வாய்ப்பிற்கு எவ்வாறு உதவி புரிகின்றன என்பதை விளக்குக.

13. (அ) வானொலி, சினிமா குறித்து சுருக்கி வரைக.

(*அல்லது*)

(ஆ) செய்தியின் அவசியம் குறித்து சிறிய கட்டுரை வரைக.

14. (அ) கணினி, இணையம் தகவல் தொடர்புக்கு உதவிடும் பாங்கைச் சுட்டுக.

(*அல்லது*)

(ஆ) இணையம், செல்போன் இன்றைய தகவல் தொடர்பில் ஆற்றும் பங்கினை சுருக்கி வரைக.

15. (அ) நாட்டு நிர்வாக இதழ்கள் என்றால் என்ன ? இது குறித்து கட்டுரை சுருக்கி வரைக.

(*அல்லது*)

(ஆ) பாரதியின் இதழ்கள் குறித்து கட்டுரை வரைக.

**பகுதி-இ** $(3 \times 10 = 30)$

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு **ஐந்து பக்க** அளவில் கட்டுரை எழுதுக.

16. இதழ்களின் பணிகள், கடமைகள், பொறுப்புகள் குறித்து கட்டுரை வரைக.

17. மரபு வழி ஊடகங்களைக் குறிப்பிட்டு அவற்றின் செல்வாக்கினை ஏற்புடைய சான்றுகள் வழி விளக்கி உரைக்க.

18. அரசு தொலைக்காட்சி நிறுவனங்களும், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விளக்கி உரைக்க.

19. திரைப்படச் சங்கங்களின் செயல்பாடுகளால் திரைப்படங்களின் தரம் கூடியிருக்கிறது. இக்கருத்தை மதிப்பீடு செய்க.

20. அவசரகால பிரகடனம் குறித்த செய்திகள் மக்களிடையே எவ்வாறு பாதிப்பு ஏற்படுத்துகிறது என்பதை எடுத்துகாட்டு தந்து விளக்குக.

———— *** ————